**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075875

C

1. District : Dharmapuri   PS: V & AC   Year: 2023   FIR No.: 01/AC/2023   Date: 07-02-2023
மாவட்டம்   காவல்நிலையம்   ஆண்டு   மு.த.அ. எண்   நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018   Sections பிரிவுகள்: u/s 7(a)
(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :   Date from :   Date to : 09.01.2023 at 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள்   நாள் முதல்   நாள் வரை 18.01.2023 at 11.30 hrs and
Time Period :   Time from :   Time to : 02.02.2023 at 11.30 hrs
நேர அளவு   நேரம் முதல்   நேரம் வரை
(b) Information Received at PS. Date : 07.02.2023   Time : 06.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்   நேரம்
(c) General Diary Reference : Entry No(s)   Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்து மூலம்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Sub-Divisional Engineer (C&M) Highways Department, Palacode, Dharmapuri District. About 25 Kms North-West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number :   (b) Address :
முறைக் காவல் எண்   முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :   District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : G. R. குப்புசாமி   (b) Father's/ Husband's Name : திரு. ராமன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்   தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 47/2023   (d) Nationality : இந்தியன்   (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு   நாட்டினம்   வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : -   Place of Issue : -
வழங்கப்பட்ட நாள்   வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : சாலை பணியாளர்   (g) Address : கெலப்பம்பட்டி மதுகூர், பனைமரப்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.
தொழில்   முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. சீனிசேகர், கண்காணிப்பாளர், உட்கோட்ட பொறியாளர் அலுவலகம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.
2) திரு. தனபால், இளநிலை உதவியாளர், உட்கோட்ட பொறியாளர் அலுவலகம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any : —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் [illegible]க்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று [illegible]க்கப்பட்டது.

G.R. [signature]

[signature] 07/02/23

14. Signature / Thumb Impression of the Complainant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம்
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.02.2023 at 10.35 hrs

Name பெயர் : ப. [illegible]
Rank நிலை : காவல் ஆய்வாளர், [illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2023, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி .

******

இன்று 07.02.2023 ஆம் தேதி காலை 06.45 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், அரூர் தாலுகா, பறையப்பட்டி அஞ்சல், கணபதிப்பட்டி பழையூரை சேர்ந்த, ராமன் மகன் திரு.G.R.குப்புசாமி, வயது 47 என்பவர் அலுவலகம் வந்து எழுத்துமூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

******

நான் தருமபுரி மாவட்டம், அரூர் தாலுகா, பறையப்பட்டி அஞ்சல், கணபதிப்பட்டி பழையூர் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 23.01.1998–ல் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையில் சாலைப்பணியாளராக பணியில் சேர்ந்தேன். தற்போது சாலைப்பணியாளராக தருமபுரி மாவட்டம், பாலக்கோடு உட்கோட்டப்பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். திப்பம்பட்டி கூட்டு ரோடு முதல் காரிமங்கலம் வரையில் செல்லும் சாலையை பராமரிக்கும் பணி எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது முதலமைச்சரின் தனிப்பிரிவு நிதியின் கீழ் அமைக்கப்பட்டு வரும் அரூர் முதல் தருமபுரி வரையிலான நான்கு வழிச்சாலைப் பணியில் பாலக்கோடு உட்கோட்ட பொறியாளரின் அறிவுறுத்தல்படி பணிசெய்து வருகிறேன். என்னுடைய பொது வருங்கால வைப்புநிதி எண்.67561 என்பதாகும். மேலும் மாதாந்திர சந்தாவாக ரூ.5000/– எனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து வருகிறார்கள். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு GPF கணக்கிலிருந்து ரூ.96000/– வட்டியில்லா கடனாக பெற்றேன். அதற்கு தற்போது வரை மாதந்தோறும் ரூ.7500/– எனது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. எனது மகளின் திருமண செலவுக்கும், எனது மனைவியின் மருத்துவ செலவுக்கும் பணம் தேவைப்பட்டதால், என்னுடைய GPF கணக்கிலிருந்து கடன்வேண்டி கடந்த 09.01.2023–ந் தேதி காலை 11.00 மணிக்கு சென்று தருமபுரி மாவட்டம், பாலக்கோடு உட்கோட்ட நெடுஞ்சாலை பொறியாளர் (பராமரிப்பு மற்றும் கட்டுமானம்) அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.தனசேகர் அவர்களை சந்தித்து என்னிடமிருந்த GPF கணக்கு விவர அறிக்கையினை கொடுத்தேன். அதனை தயார்செய்து அனுப்ப

வேண்டுமென்றால் ரூ.4000/– பணம் கொடுத்தால்தான் அனுப்பமுடியும் என்று கண்காணிப்பாளர் திரு.தனசேகர் கண்டிப்புடன் கூறினார். நான் பணம் ஏதும் இல்லை என்றும் மிகவும் கஷ்டமான சூழலில் பணிசெய்து வருவதால் உதவி செய்யுமாறும் வேண்டினேன். அதற்கு கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்கள் GPF Loan பணம் பெற்றுத்தரவேண்டுமென்றால் பணம் ரூ.4000/–த்தை லஞ்சமாக கொடுத்தால் செய்து தருகிறேன் என்று கூறிவிட்டு அலுவலகத்திலிருந்த இளநிலை உதவியாளர் திரு.தனபால் அவர்களை பார்க்குமாறு தெரிவித்தார். உடனே நானும் அங்கிருந்த இளநிலை உதவியாளர் திரு.தனபால் அவர்களை சென்று பார்த்தபோது அவரும், கண்காணிப்பாளர் சொல்கிறபடி செய்துவிட்டுப்போங்கள் என்று தெரிவித்துவிட்டார். நான் ஒன்றும் சொல்லாமல் திரும்ப வந்துவிட்டேன். அதன் பின்னர் பொங்கல் விடுமுறைக்கு பின்னர் 18.01.2023–ந் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு பாலக்கோடு உட்கோட்ட நெடுஞ்சாலை பொறியாளர் (பராமரிப்பு மற்றும் கட்டுமானம்) அலுவலகத்திற்கு சென்று கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்களை சந்தித்து எனது GPF கடன் விண்ணப்பம் குறித்து கேட்டேன். அப்போது அலுவலகத்திலிருந்த கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்களும், இளநிலை உதவியாளர் திரு.தனபால் அவர்களும் என்னிடம் ஏற்கனவே கூறியபடி பணம் ரூ.4000/–த்தை கொடுத்தால் செய்து தருகிறோம், இல்லாவிட்டால் அப்படியே கிடப்பில் வைத்துவிடுவோம் என்று திட்டவட்டமாக கூறிவிட்டனர். என்னிடம் பணம் எதுவும் இல்லாததால் ஒன்றும் சொல்லாமல் திரும்ப வந்துவிட்டேன். பின்னர் எனக்கு லீவு எதுவும் கிடைக்காததாலும், அதிகமான பணி இருந்ததாலும் பாலக்கோடு நெடுஞ்சாலைத்துறை உட்கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்களை சந்திக்கவில்லை. அதன் பின்னர் 02.02.2023–ந் தேதி காலை 11.30 மணிக்கு பாலக்கோடு நெடுஞ்சாலைப்பிரிவு உட்கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்களை சந்தித்து எனது GPF Loan மனுவின் நிலை குறித்து கேட்டேன். அதற்கு கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்கள் என்னைப் பார்த்து ஏற்கனவே உன்னிடம் சொல்லிவிட்டேன் பணத்தை தயார் செய்து கொண்டு வந்து பார் என்று அப்புறம் சும்மா வந்து நின்றால் என்ன செய்ய, போ! போய் Junior Assistant திரு.தனபால் அவர்களை பார் என்று தெரிவித்தார். நானும் Junior Assistant திரு.தனபால்

அவர்களை சென்று பார்த்தேன். அவர் என்னை கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்களிடம் அழைத்து வந்தார். அப்போது கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்கள் என்னிடம், நீ ஏற்கனவே Selection Grade போட்டதற்கும் பணம் தரவில்லை, அதற்குமுன் GPF போட்டுத்தந்ததற்கும் பணம் தரவில்லை எனவே அதற்கெல்லாம் சேர்த்து ரூ.4000/– ஐ தயார் செய்து கொண்டு Junior Assistant திரு.தனபால் அவர்களிடம் கொடுத்துவிடு, நான் வேலையை முடித்து தருகிறேன் என்று கறாராக தெரிவித்தார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று தெரிவித்து பணியை முடித்துதர கோரியதற்கு, கண்காணிப்பாளர் திரு.தனசேகர் அவர்களும், Junior Assistant திரு.தனபால் அவர்களும், கூட்டாக ரூ.4000/– தயார் செய்து கொண்டு வந்தால் உனது GPF கணக்கிலிருந்து கடனாக பணம் பெற்றுத்தருகிறோம், இல்லாவிட்டால் முடியாது என்று கூறி என்னை அனுப்பிவிட்டனர். நானும் திரும்ப வந்துவிட்டேன். வேலை நிமித்தம் காரணமாக என்னால் அன்றே புகார் கொடுக்க முடியவில்லை. மேலும் பணம் ரூ.4000/–த்துடன் தன்னை அலுவலகத்தில் எப்பவேண்டுமானலும் பார்த்து கொடுக்குமாறும் கூறினார். ஆகவே பாலக்கோடு நெடுஞ்சாலை, உட்கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.தனசேகர் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.தனபால் ஆகியோர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4000/–த்தை கொடுத்து எனது வேலையை முடிக்க விருப்பமில்லை. எனவே அவர்கள் கேட்ட பணம் ரூ.4000/–த்துடன் அவர்களை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் நெடுஞ்சாலை உட்கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.தனசேகர், இளநிலை உதவியாளர் திரு.தனபால் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் G.R.குப்புசாமி, சாலைப் பணியாளர், 07.02.2023. Sir, Received the written complainant on 07.02.2023 at 06.45 hrs and further between 06.45 hrs and 07.15 hrs, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No. 01/AC/2023, u/s 7(a) of the

Prevention of Corruption Act, 1988 as amended in 2018 (Central Act 16 of 2018) was registered today 07.02.2023 at 07.30 hrs against the accused. The original FIR and the complainant of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

07/02/23

**(P.PALANISAMY)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.